அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

ஆய்வு மாளிகை

*__8704__—**திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, பரப்பலாறு அணையிலுள்ள ஆய்வு மாளிகையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒட்டன்சத்திரம் வட்டம், பரப்பலாறு அணையிலே உள்ள ஆய்வு மாளிகை பராமரிக்கப்படுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். ஒட்டன்சத்திரம் வட்டம், பரப்பலாறு அணையிலே உள்ள ஆய்வு மாளிகை ஒவ்வோர் ஆண்டும் அணை பராமரிப்பிற்கென ஒதுக்கப்படும் நிதியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், ஒட்டன்சத்திரம், பரப்பலாறு அணையைச் சீரமைக்க அணை பாதுகாப்புத் திட்டம் பகுதி-III-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அணை பாதுகாப்புத் திட்டத்திற்கான திட்ட மதிப்பீட்டில் ஆய்வு மாளிகையைச் சீரமைக்கவும் சேர்க்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

2013 அக்டோபர் 24]

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரப்பலாறு அணை என்பது ஒட்டன்சத்திரம் நகரிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவிலே மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலே அமைந்துள்ளது. இந்த அணையின் அருகே கட்டப்பட்ட ஆய்வு மாளிகை மிகவும் பழுதடைந்துள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலில், அணை பாதுகாப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், நிதி கிடைத்தவுடன் பணி ஆரம்பிக்கப்படும் என்று கூறியுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆய்வு மாளிகையை பழுதுபார்க்கத் தேவையான நிதியை ஒதுக்கி, உடனடியாகச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பரப்பலாறு அணை என்பது சுமார் 90 அடி உயரம் கொண்ட அணையாகும். அந்த அணையின் நீர் ஆதாரத்தை வைத்துத்தான் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு ஆண்டுதோறும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதோடுமட்டுமல்லாமல், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 30 ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்களும் இந்த அணையின் மூலமாகத்தான் நீர் பெற்று வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், அந்த அணையின் மூலமாக சுமார் 2,500 ஏக்கர் விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கிறது. அந்த அணை மலைப் பகுதியில் அமைந்திருக்கின்ற காரணத்தால் வண்டல் மண் 30 அடி வரை படிந்து, மழை பொழிகின்ற காலங்களில் அணையில் முழுவதுமாக நீரைச் சேமித்து, தேக்கி வைக்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அணையைத் தூர் வாரினால் ஒட்டன்சத்திரம் நகர மக்களுக்கு நிரந்தரமாகக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க ஏதுவாக இருக்கும். அதேபோல ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து மக்களும் பயன்பெற வாய்ப்பு உள்ளது.*

அந்த அணையின் மூலமாக வருகின்ற உபரி நீரால் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 10 குளங்கள் நிரம்ப வாய்ப்பு உள்ளது. பொதுமக்கள் நலன் கருதியும், விவசாயிகள் நலன் கருதியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அணையைத் தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று முறை உறுப்பினராக இருந்திருக்கிறார். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இவற்றையெல்லாம் கேட்கவில்லை, செய்யவில்லை. இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்காமலேயே செய்து தருகின்ற ஆட்சி நடத்துகின்ற காரணத்தினாலே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்கள். நீங்கள் கேட்காமலேயே அந்த ஆய்வு மாளிகையைச் சீரமைக்க நிதி ஒதுக்கி, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். வருகின்ற காலங்களிலே அந்த அணையினைத் தூர் வாருவதற்கான நடவடிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தொகுதியில், கொத்தயம் என்ற இடத்தில் நல்லதங்காள் என்ற அணை கட்டப்பட்டு வருகின்றது. அந்த அணையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட ஆறு மாதத்திற்கு முன்பு வந்து ஆய்வு செய்துவிட்டுப் போனார்கள். அந்த அணையைக் கட்டும் பணி சுமார் 80 விழுக்காடு முடிவடைந்து விட்ட நிலையில், தற்போது அந்தப் பணிகள் நடைபெறாமல் உள்ளன. அந்த அணைக்குத் தேவையான நிலத்தைக் கொடுத்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்காத காரணத்தினாலும், தற்போது மழை பெய்கின்ற காரணத்தினாலும் அந்தப் பணியில் தற்சமயம் சிறிது தொய்வு ஏற்பட்டுள்ளது. அணையைக் கட்டுவதற்காக நிலத்தைக் கொடுத்த விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்கி, அந்தப் பணிகளை விரைவாக முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2013 அக்டோபர் 24]

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விரைவிலேயே அந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகைகளை வழங்கி, பணிகள் நடைபெற உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

13—

சமுதாயக் கூடம்

***18596—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, செங்கமலப்பட்டி ஊராட்சி, அருந்ததியர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், விருதுநகர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த சிவகாசி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செங்கமலப்பட்டி ஊராட்சியில் ஆதி திராவிடர் மக்கள் அதிகமாகக் குடியிருந்தால், போதுமான இட வசதி இருப்பின், அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதி நிலைமைக்கேற்ப அங்கே சமுதாயக் கூடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.